செ.வெ.எண் : 15 /ஜூன் நாள் : 08.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## ஈரான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, சொந்த மாவட்டத்திற்கு திரும்பிய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்களை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, ஈரான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, சொந்த மாவட்டத்திற்கு திரும்பிய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்களை, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்று, அவர்களது குடும்பத்தினருடன் ஒப்படைத்தார்.

1. பாலமுருகன் த/பெ நம்பு, இராமேஸ்வரம்
2. நம்புகுமார் த/பெ நம்பு, இராமேஸ்வரம்
3. மாரிச்செல்வம் த/பெ சின்னஉமையன், இராமேஸ்வரம்
4. இலங்கேஸ்வரன் த/பெ லெட்சுமனன், இராமேஸ்வரம்
5. பாண்டி த/பெ கருப்பையா, இராமேஸ்வரம்
6. இராசு த/பெ பஞ்சு, இராமேஸ்வரம்
7. லூயிஸ் த/பெ அலங்காரம், இராமேஸ்வரம்
8. இராமகிருஷ்ணன் த/பெ முனியாண்டி, புதுமடம்
9. முனியசாமி த/பெ வெள்ளைச்சாமி, ஆற்றங்கரை
10. கண்ணன் த/பெ ஆறுமுகம், ஆற்றங்கரை
11. சின்னையா த/பெ முனியசாமி, தொண்டி
12. குப்புசாமி த/பெ காயாம்பு, கட்டையன்வலசை
13. இராஜேந்திரன் த/பெ கருப்பையா, தினைக்குளம்
14. கண்ணன் த/பெ முத்துகருப்பன், கட்டையன்வலசை
15. தங்கச்செல்வன் த/பெ பாக்கியம், கொல்லந்தோப்பு

மேற்கண்ட இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்கள், மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது ஈரான் கடற்படையால் 27.12.2016 அன்று கைது செய்யப்பட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் 28.05.2017 அன்று ஈரான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, 08.06.2017 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்தடைந்தனர்.

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்தடைந்த மேற்கண்ட 15 மீனவர்களையும், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்று, அவர்களது குடும்பத்தினருடன் ஒப்படைத்தார்.

இந்த நிகழ்வின் போது, இராமநாதபுரம் மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., துணை இயக்குநர் திரு.பா.ஐசக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு.இரா.கருணாகரன் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**